# கிறித்தவ இலக்கிய வெளியில் மனித மதிப்பீடுகள்

## பன்னாட்டுக் கருத்தரங்கு

### தொகுதி - 3




தமிழ் உயராய்வு மையம்

பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)

மதுரை - 18


Scanned by CamScanner

## உரைநடை



| | | | |
|---|---|---|---|
| | | லெவே சாமியின் வாழ்வியல் மனிதநேயம் | 65 |
| 18. | முனைவர் இராஜாத்தி, ஆ. | ரேனியஸ் ஐயரின் மனித மாண்புகள் | 68 |
| 19. | திருமதி சாந்தி, இரா. | கிறித்தவ இலக்கியங்களும் தொன்மைத் தமிழும் | 72 |
| 20. | கவிஞர் தஸ்லிம் காஜா | வங்கத்தின் தங்க மனிதர் வில்லியம் கேரி மொழிப்பணியும் சமூகப்பணியும் | 76 |
| 21. | முனைவர் பாத்திமா, ஜே. | | |
| 22. | திருமதி லியோ டென்சிலி, லி. | மூதறிஞர் சூ. இன்னாசி கட்டுரைகளில் மனித மதிப்பீடுகள் | 79 |



## சிறுகதை



| | | | |
|---|---|---|---|
| 23. | திருமதி காயத்ரி, ர. | 'சிலுவை' சிறுகதையில் துறவியல் மதிப்புகளும் நன்மதிப்புப் போராட்டமும் | 82 |
| 24. | திருமதி பாண்டியம்மாள், ரா. | 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' சிறுகதைத் தொகுப்பில் அன்பு | 85 |



## நாவல்



| | | | |
|---|---|---|---|
| 25. | திரு. செல்வக்குமார் | கிளாரிந்தா நாவலில் கிறித்தவ வாழ்வியல் மதிப்பீடு | 88 |
| 26. | ஹெலன், ஜோ. | அருட்பணி மாற்கு சே.ச வின் சுவர்கள் காட்டும் கிறிஸ்தவ மதிப்பீடு. | 91 |



## நாடகம்



| | | | |
|---|---|---|---|
| 27. | முனைவர் பொன்னி, இரா. | ஞானத்தச்சன் நாடகத்தில் வாழ்வியல் அறநெறிகள் | 95 |
| 28. | திருமதி மரகதம், ச.கா. | தாமஸ் மலைக் குறவஞ்சி நாடகம் காட்டும் மனித மதிப்பீடுகள் | 98 |



## கவிதை



| | | | |
|---|---|---|---|
| 29. | ஆனந்தி, தி. | இயேசுகாவியம் கூறும் மனிதமாண்பு | 102 |
| 30. | முனைவர் எஸ்தர் அருள்மேரி, சா.ஞா. | வேதநாயக சாஸ்திரியாரின் கவிதைகளில் திருவிவிலியக் கோட்பாடுகள் | 105 |
| 31. | திருமதி கார்த்திகா, மு. | மனிதநேயமும் இயேசு மாகாவியமும் | 111 |
| 32. | முனைவர் குமரகுருபரன், க. | இயேசு காவியத்தில் தனிமனித மதிப்பீடுகள் | 114 |
| 33. | குளோரி, த. | இயேசுகாவியத்தில் மனிதப் பண்பு | 118 |
| 34. | திருமதி சகாய பவுலின், ஜோ. | கன்னிமரி காவியத்தில் அன்பு | 122 |



Scanned by CamScanner

# கன்னிமரி காவியத்தில் அன்பு

ஜோ. சகாய பவுலின்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
பாத்திமா கல்லூரி, மதுரை

தமிழிலக்கியங்களுள் அளவாலும், தரத்தாலும், எண்ணிக்கையாலும் மிகுந்து நிற்பவை செய்யுள் மற்றும் கவிதை இலக்கியங்களே. அவற்றுள்ளும் காப்பியங்கள் எனப்படும் தொடர்நிலைச் செய்யுள் தனியிடம் பெறுகின்றது. 'பக்தி மொழி' எனப் பாராட்டப்படும் தமிழ் மொழியில் பல்வேறு சமயங்களைச் சேர்ந்த காப்பியங்கள் உள்ளன. உலகப் பெருஞ்சமயங்களுள் ஒன்றாகப் போற்றப்படும் கிறிஸ்தவம் சார்ந்த காப்பியங்கள் பல உள்ளன. அவை தமிழுக்குப் பெருமை சேர்க்கின்றன. இத்தகைய சிறப்பு மிக்க கிறித்தவக் காப்பியமான கன்னிமரி காவியத்தில் இடம்பெற்றுள்ள அன்பு குறித்த செய்திகளை விளக்குவதாக இந்த ஆய்வுக் கட்டுரை அமைகிறது.

**இலக்கியத்தில் அன்பு**

மனித வாழ்வு நலமாகவும், இன்பமாகவும் இயங்க உதவுவது அன்பு. கடவுள் மனிதர்களுக்கு வழங்கிய அற்புதக் கொடைகளுள் ஒன்று அன்பு. அன்பு உள்ளங்களை உள்ளங்களோடு இணைக்கும்- ஆற்றலுடையது. "ஆற்றல் மிக்க அன்பு" என்பார் அப்பரடிகள். இந்த அன்பு வளரும் தன்மை கொண்டது. அன்பின் உணர்ச்சிக்கு எல்லை இல்லை. அதற்கு நிபந்தனை கிடையாது.

தம்முடன் பழகுவோரின் இயல்புகளை அறிவது, அவர் தம் இயல்புக்கு ஏற்றவாறு தம் பழக்கங்களையும் பழகும் நெறிமுறைகளையும் விருப்பத்துடன் ஏற்றுக் கொள்வதே உண்மையான உன்னதமான அன்பு. இதனை 'ஒத்தறிவான்' என்று திருக்குறள் கூறும். மற்றவர் தம்முடன் ஒத்துப்போக வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் வாழ்வது உண்மையான அன்பு ஆகாது.

தூய அன்பானது விரிவடையும். தம்முடன் பழகுவோரின் இயல்பினை அறிந்து, பழகும் விதத்தில் வளர்ச்சி அடையும். அவர் தம் தேவையறிந்து உதவும். அவர் தம் வாழ்வுக்காகத் தன் வாழ்வினை அர்ப்பணிக்க வேண்டும் என்று எண்ணும் இந்த அன்பே உயர்ந்த அன்பு. "அன்பினை எடுத்துக்காட்ட அளவில்லா ஆர்வம் பொங்கி" என்ற திருவாக்கினை எடுத்துரைக்கிறார் சேக்கிழார். அன்பானது அளவிட முடியாத உயர்ந்த நிலையில் இருக்க வேண்டும் என்பதே அவர் கருத்து.

நட்புக்கு மறுபெயர் தோழமை. நட்பு இதயத் தூய்மை உடையது, நட்பு எல்லையற்றது, அழிவற்றது என்பதனை,

**"அன்பு ஈனும் ஆர்வமுடைமை அது ஈனும்**
**நண்பென்னும் நாடாச் சிறப்பு" (குறள் - 74)**

என்னும் இக்குறள் விளக்குகிறது.

**விவிலியம் காட்டும் அன்பு**

விவிலியமானது நமக்கு ஏராளமான இறைவாக்கினர்களையும், அவர்கள் இறை இயேசு மீது கொண்டிருந்த ஆழமான விசுவாசத்தையும் பல்வேறு கோணங்களில் நமக்குப் படம்பிடித்துக் காட்டுகிறது. பழைய ஏற்பாடானது மோயீசன் வழியாக நமக்கு ஓர் அன்புக் கட்டளையை அளிக்கிறது. 'உன் ஆண்டவராகிய கடவுளை முழு இதயத்தோடு அன்பு செய்' என்றும், புதிய ஏற்பாட்டில் 'உன் மீது நீ அன்பு காட்டுவதைப் போல உன் அயலான் மீதும் அன்பு காட்டு' என்றும் அன்பு சார் போதனையை நமக்குக் கற்பிக்கிறது.

**"உன்னைப் போல் பிறரையும் அன்பு செய்"**

**"தாய் உன்னைக் கைவிட்டாலும் நான் உன்னைக் கைவிட மாட்டேன்"**

"தன் நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதை விட மேலான அன்பு வேறெங்கும் இல்லை" போன்ற விவிலிய வரிகள் அன்பின் சிறப்பினை ஆழமாக எடுத்துரைக்கின்றது. மேலும் 1 கொரிந்தியர் 13வது அதிகாரம் அன்பின் சிறப்பினை மேலும் சிறப்பாகக் கூறியுள்ளது. அன்பு பொறுமையுள்ளது, நன்மை செய்யும், பொறாமைப்படாது, தற்புகழ்ச்சி கொள்ளாது, இறுமாப்பு அடையாது, அன்பு இழிவானதைச்



Scanned by CamScanner